பிரமாதமாக அதிகரித்திருப்பதாக செல்லாப்படுகிறதே, அதனால் சில பொருள்கள் விஷயத்தில் பற்றாக்குறையும் விலைவாசி அமைப்பில் கோணல்களும் ஏற்பட்டிருக்கிறதா உணவு தானிய உற்பத்தி, ரொக்க மகசூல்கள், உற்பத்தி ஆகியவை பற்றிய புள்ளி விவரங்கள் நம்ப தகுந்தவைதானா? மத்திய அரசு திட்டவட்ட மாக பதில் அளித்து ஆக வேண்டிய முக்கியமான சில கேள்விகள் தான் இவை. அப்போதுதான் நாட்டின் பொருளாதாரம் எந்த திசையில் செலுத்தப்படுகிறது என்பதை பொதுமக்கள் தெரிந்து கொள்ள முடியும். ஆக, இப்படிப்பட்ட ஒரு தலையங்கத்தை 'இந்து' பத்திரிகை எழுதுகிறது என்று சொன்னால் இந்த விலை ஏற்றத்திற்குக் காரணம் யார் என்று நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்னுடைய விளக்கத்திற்கு பிறகு அவையை ஒத்தி வைத்து விவாதிக்க தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு ஒன்றை மட்டும் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன். கடந்த பல ஆண்டுகளில் தமிழ்நாட்டிலே விலைவாசி ஏறுகின்ற நேரத்தில் எல்லாம் அதைக் கண்டித்து பலமுறை சிறை சென்ற மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், அமைச்சர்களில் சிலரும் சிறை சென்றவர் களாக இருக்கின்ற காரணத்தாலும் இந்த ஆட்சியில் நிச்சயமாக விலைவாசியைக் கட்டுப்படுத்துவோம், விலைவாசி அதிகரிக்க அனுமதிக்க மாட்டோம் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் விரிவான விளக்கத்திற்கு பின் அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

---

3. தகவல் கோரல்.

(அ) மோகனூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் பிரச்சினை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சர்க்கரையைப் பற்றியும் அதனுடைய விலையைப் பற்றியும் இங்கே மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண் டிருக்கும்போது நான் மோகனூர் சர்க்கரை ஆலையைப் பற்றி சர்க்காருக்கு நினைவுப்படுத்துகின்ற வகையில் வேண்டுகோளாக

1989 நவம்பர் 1] [திரு. குமரி அனந்தன்]

சில வார்த்தைகளைச் சொல்கிறேன். மோகனூர் சர்க்கரை ஆலை கூட்டுறவு அமைப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆலைகளுள் மிகச் சிறந்த ஆலை ஆகும். சென்ற மாதம் மட்டும் 2½ கோடியிலிருந்து 3 கோடி ரூபாய் வரை லாபம் ஈட்டியது. 18 ஆயிரம் விவசாயிகள் அதிலே தங்களுடைய கரும்பை அரைவைக்குக் கொடுக்கிறார்கள். 1,500 தொழிலாளர்கள் அதிலே பணிபுரிந்து தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அமைதியான சூழ்நிலை இருக்கிறபொழுது அதனுடைய வெற்றிக்குக் காரணமாக இருப்பது 6 மாதம் செய்ய வேண்டிய அரைவையை அங்குள்ள தொழிலாளர்கள் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றுகிற காரணத்தால் 5 மாதத்திலேயே முடித்துவிடுகிறார்கள். ஏனென்றால் கரும்பை வெட்டிய பிறகு அவை காய்ந்து போகாமல் இருக்க எவ்வளவு சீக்கிரமாக அரைவை செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அரைவை செய்வது நல்லது அதனால்தான் 2,500 டன்தான் ஒரு நாளைக்கு அரைக்க முடியும் என்ற சூழ்நிலை இருக்கும்போது அந்தத் தொழிலாளர்கள் நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் டன் வீதம் அரைவை செய்கிற காரணத்தால் 6 மாதத்தில் நடைபெற வேண்டிய வேலை 5 மாதத்திலேயே முடிந்துவிடுகிறது. 6-வது மாதத்தில் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்ற காரணத்தினால் விவசாயிகள் எல்லோருமாக சேர்ந்து தாங்கள் உற்பத்தி செய்கின்ற கரும்பிலே இருந்து, டன் ஒன்றுக்கு 2 ரூபாய், 3 ரூபாய் என்கிற அளவுக்கு அவர்களாகவே மனமுவந்து தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ் ஆக கொடுக்கிறார்கள். அப்படி ஊக்க போனசாகக் கொடுத்துக்கொண்டிருப்பதை வாங்கிக்

(11-40)

கொடுத்த சில நல்ல சமுதாயத் தொண்டர்களைப் பாராட்டி ஒரு ஆண்டு அறிக்கையை வெளியிட்ட காரணத்தாலே, அங்கே இருக்கிற தனி அலுவலர் கோபமுற்று, "அப்படியா ; அப்படி என்றால் இனிமேல் ஊக்க போனஸ் கொடுப்பதற்கு நான் ஒத்துழைக்க மாட்டேன்" என்ற அறிவிப்பை எழுதி வைத்த நாளிலிருந்து அங்கே பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன.

எனவே 5 மாதம் வேலை, 6-வது மாதம் ஊக்க போனசால் வாழ்க்கை என்ற நிலையை மாற்றி, நான் ஊக்க போனஸ் பெற ஒத்துழைப்பு தர மாட்டேன் என்று தனி அலுவலர் சொன்னதோடு மட்டுமல்லாமல், அந்த ஊக்க போனஸ் கிடைக்காமல் இருப்

பதற்கு என்னென்ன வழிகளோ அதை எல்லாம் அந்தத் தனி அதிகாரி செய்து கொண்டிருப்பதாகவும், அங்கே தொழிலாளர்களுக்கும் தனி அலுவலருக்கும் கருத்து வேறுபாடு இருப்பதன் காரணத்தால் மோதல் முற்றுகிறதென்று சொல்லுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ஒரு தொழிலாளி, சைக்கிளில் போனவர், தனி அலுவலரைக் கண்டு கீழே இறங்கவில்லை என்பதற்காக அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார். இவைகளை எல்லாம் குறிப்பிடுவதற்குக் காரணம், ஏதாவது பிரச்சினைகள் வந்து, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் போய்ப் பேசும்போது, அவர்களோடு பேச அல்லது அவர்களைச் சந்திக்க அனுமதி மறுக்கிறார் அந்தத் தனி அலுவலர். அதனாலே இப்போது என்ன நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அவர் ஒரு போர்டு எழுதி வைத்திருக்கிறார் வெளியே. "வேலை கிடைப்பது அரிது, கிடைத்த வேலையைக் காப்பாற்றிக் கொள்வது அதைவிட அரிது, மாட்டிக் கொண்டால் கஷ்டம்தான்" என்று எழுதி வைத்திருக்கின்ற அளவுக்கு அவரும், "அப்படியா, நாங்கள் சொல்கிறோம் வேலை நிறுத்தம் செய்வோம், வேறு வழியில்லை" என்று இவர்களும் சொல்லுகின்ற நிலை இருக்கிறது. கடந்த 19 ஆம் தேதி கூடி, வேலை நிறுத்தம் செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தி.மு.க., அகில இந்திய அண்ணா தி.மு.க., ஐ.என்.டி.யு.சி., சி.ஐ.டி.யு., சீசனல் தொழிலாளர் சங்கம், கரும்பு உதவியாளர் சங்கம் ஆக இத்தனை தொழிற் சங்கங்களும் சேர்ந்து, 19 ஆம் தேதி கூடி, இந்த மாதம் 4 ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் என்று அறிவித்திருக்கிறார்கள். இன்றிலிருந்து அங்கே கரும்பு அரைவை தொடங்குகிறது. இன்றிலிருந்து கரும்பு அரைவை தொடங்கி, அதை வெட்டிக் கொண்டு போய் அங்கே போட, நான்காம் நாளிலே அவர்கள் வேலைநிறுத்தம் செய்வார்களானால், வெட்டிப் போட்டிருக்கிற கரும்பெல்லாம் வீணாகப் போய்விடும் என்பது ஒன்று. வெட்டாமல் உள்ள கரும்பெல்லாம் சாய்ந்துபோகும் என்பது ஒன்று. ஆதலாலே வெட்டிப்போடப்பட்ட கரும்புகள் வீணாகிப் போகாமலும், வெட்டப்படாத கரும்புகள் முற்றி, காய்ந்து போகாமலும் இருப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்வதற்காகத்தான் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன் விவாதிக்க வேண்டுமென்று. தாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானமாக இல்லாமல், கருத்துக்களைச் சொல்லிவிடலாம் என்று சொல்லிய

1989 நவம்பர் 1] [திரு. குமரி அனந்தன்]

காரணத்தாலே, இந்தக் கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் நேற்றைய தினம் வேண்டுகோள் விடுத்தேன். எனவே நமது மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் அல்லது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், கூட்டுப் பொறுப்பு இருக்கிற காரணத்தால், யாரோ ஒருவர்—இதற்கு பதில் சொல்ல வேண்டுமென்று நான் விரும்பவில்லை—அந்த வேலை நிறுத்தத்தைத் தவிர்த்து, எல்லோரும் சுமுகமான சூழ்நிலையிலே தங்களுடைய பணிகளைச் செய்து, விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு மக்களுக்குக் கிடைக்கக்கூடிய சர்க்கரை அத்தனையும் கிடைப்பதற்கு உரிய பதிலைத் தர வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனூர் சர்க்கரை ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்களின் தொழிற் சங்கங்கள் அனைத்தும் சில குறைபாடுகளை மையமாக வைத்து, 1 ஆம் தேதி அளவில் இந்தக் குறைபாடுகள் நீக்கப்படாவிட்டால், 4 ஆம் தேதியிலிருந்து போராடுவோம் என்று அறிவிப்பு தந்திருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து 27—10—1989 அன்று தொழிலாளர் அலுவலர் இருசாரரையும் அழைத்துப் பேசியிருக்கிறார். இரு சாரரும் தொழிலாளர் அலுவலர் முன்பாக, 1 ஆம் தேதி கூடி, சுமுகமாகப் பேசி, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதாக ஒப்புக்கொண்டு, இன்று பேச்சு வார்த்தை சுமுகமாக நடந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக இணக்கமான முடிவு ஏற்படும் என்று கருதுகிறேன். எனவே 4 ஆம் தேதி போராட்டம் நிச்சயமாக இராது என்று கருதுகிறேன். எனவே எந்தவிதமான குழப்பமும் இல்லாமல், ஆலை தன்னுடைய பணியைத் தொடங்க இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தனி அதிகாரி தவறு செய்திருக்கிறார் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டார்களோ, அந்தத் தனி அதிகாரி மாற்றப்பட்டிருக்கிறார் என்ற தகவலை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.